**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2022**

**P103 இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாரதியாரின் முதல் பாடல் எது? அப்பாடல் இடம்பெற்ற இதழ் எது?
2. மணிக்கொடி கவிஞர் இருவரைக் குறிப்பிடுக.
3. சாகித்ய அகாதமி விருதுபெற்ற பாரதிதாசனின் படைப்பு எது?
4. தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவருக்கோர் குணமுண்டு எனப்பாடியவர் யார்?
5. கவிஞர் முடியரசன் தம் இறப்பு எந்த வடிவில் வரவேண்டும் என பாடியுள்ளார்?
6. சிற்பியின் நாய்க்குடை கவிதை எதனைப் பற்றியது?
7. காற்று பற்றிய கவிதையில் கவிக்கோ அப்துல் ரகுமான் எதனைக் கண்டித்துப் பாடியுள்ளார்?
8. ஐந்தாண்டுக்கு ஒரு முறை என்னும் கவிதையில் உள்ள தொன்மம் எது?
9. மீராவின் மேலே மேலே பூக்கடை கீழே... சாக்கடை – இக்குறியீடு வெளிப்படுத்துவது என்ன?
10. பள்ளி எழுச்சி என்னும் இலக்கிய வகையின் தோற்றத்திற்கான அடிப்படைத் துறை எது?
11. முதல் தூது நூல் எது?
12. அம்மானை என்ற உறுப்பு எத்தனைப் பெண்கள் பாடுவதாக அமைந்துள்ளது?
13. ஒட்டக்கூத்தரின் சிறப்புப் பெயர்களுள் இரண்டனைக் குறிப்பிடுக.
14. பாவலர் புலமைப்பித்தனின் புரட்சித் தீ எதனைப் பற்றிப் பாடப்பட்டது?
15. முதல் உலா நூல் எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பட்டுக்கோட்டையாரின் பாடல்களில் வெளிப்படும் பொதுவுடைமைக் கருத்துகளை எழுதுக.
2. கவிஞர் சிற்பியின் கவிதைகளில் வெளிப்படும் சமூக அக்கறையை விவரிக்க.
3. தமிழின் தனிச்சிறப்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
4. தீண்டாமையைப் பற்றி கவிஞர் முடியரசன் கூறுவன யாவை?
5. கவிஞர் மஹாகவி கையூட்டு குறித்து கூறுவன யாவை?
6. திருமால் கோயில்களைச் சிறப்பித்து பெரிய திருமடல் கூறுவனவற்றை இயம்புக.
7. விக்கிரமசோழனின் கோயில் பணிகளை விவரிக்க.
8. தக்கயாகப்பரணியில் பயின்றுவரும் அணிகள் இரண்டினைச் சான்றுடன் எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) புதுக்கவிதையின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பாடுபொருள்கள் குறித்து ஆய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் பாடல்களில் வெளிப்படும் தமிழ்த்தேசியம், பகுத்தறிவுக் கருத்துகளை எடுத்துரைக்க.

2. (அ) கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களின் தனிச்சிறப்பினைப் விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) குறியீடு, படிமம், தொன்மம், ஆகியவற்றை கவிஞர் அப்துல்ரகுமான் கையாண்டுள்ள பாங்கினை விவரித்துரைக்க.

3. (அ) தூது இலக்கியங்களில் தனிச்சிறப்பு மிக்கது தமிழ்விடுதூது என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) அற்புதத் திருவந்தாதியில் இடம்பெற்றுள்ள உவமை நயங்களை விளக்கியுரைக்க.

***